அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 32/96

எனது இல. ஆ/11/2/1/25
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு. 7
1996, நவம்பர் மாதம் 12 ஆந் திகதி.

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவர்க்கும்.

அரச பணியாளர்களை ஓய்வு பெறச் செய்தல்–
ஓய்வு பெறுவது பற்றிய விருப்பம்.

---

1996.12.17 ஆந் திகதி தொடக்கம் செயற்படும் வண்ணம் பின்வரும் அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகள் இரத்துச் செய்யப்படுகின்றன.

1. 1990.10.18 ஆந் தேதிய 44/90 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை.

11. 1990.11.20 ஆந் தேதிய 44/90(1)ஆம் இலக்க அரசாங் நிருவாகச் சுற்றறிக்கை.

111. 1990.12.24 ஆந் தேதிய 44/90(11)ஆம் இலக்க அரசா நிருவாகச் சுற்றறிக்கை.

1V. 1991.03.14 ஆந் தேதிய 44/90(111)ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை.

02. 44/90 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் கீழ் 1996.12.16 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக ஓய்வுபெற உத்தேசிக்கும் ஒரு உத்தியோகத்தர் ஓய்வு பெறுவதற்காக ஒரு மாத கால அவகாசம் வழங்கும் தேவையிலிருந்து விலக்களிக்கப்படுவார்.

03. 1996.12.17 ஆந் திகதி தொடக்கம் செயற்படும் ஓய்வு பெற வைத்தல்கள் யாவும் அவ்வப்போது திருத்தப்பட்ட 1934 பெப்ரவரி மாதம் 05 ஆந் தேதிய ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைவாக மேற் கொள்ளப்படும்.

04. ஆயினும் 1988.08.30 ஆந் தேதிய 30/88 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை மூலம் விதிக்கப்பட்ட இருபது வருடகாலச் சேவையின் பின் ஓய்வு பெறுவதற்கான விருப்பம் தெரிவிக்கும் உரிமை தொடர்ந்தும் வலுவிலிருக்கும். அந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின்படி அத்தகைய உத்தியோகத்தர் ஒருவருக்கு 55 வயது பூர்த்தியான பின்னரே அவர் ஓய்வூதியம் பெறுவதற்கு உரித்துடையவராவா

05. இந்தச் சுற்றறிக்கையில் உள்ளடங்கிய விடயங்களை தங்களின் நிருவகத்தில் உள்ள எல்லா உத்தியோகத்தர்களினதும் கவனத்திற்கு கொண்டு வரவும்.

06. பொதுத் திறைசேரியின் ஒத்திசைவுடன் இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்: ஆர். எஸ். ஜயரத்ன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு.